සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය தரம் Grade | 10 | විෂයය பாடம் Subject | இஸ்லாம் | පත්‍රය வினாத்தாள் Paper | I | පැය மணித்தியாலம் Hours | 1 |
|---|---|---|---|---|---|---|---|

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. இஸ்லாமிய அகீதாவை முறையாகப் பின்பற்றுபவர்கள்,
   1. மு.ஃ.தஸிலாக்கள்  3. அஹ்லுஸ்ஸுன்னாக்கள்
   2. கதரியாக்கள்  4. ஜபரிய்யாக்கள்

2. உள்ளத்தினால் மேற்கொள்ளும் திக்ரு,
   1. திக்ர் கல்பி  2. திக்ர் லிஸானி  3. தக்பீர்  4. தஸ்பீஹ்

3. மனித வாழ்க்கையின் ஆரம்பப் பயிற்சி நிலையம்,
   1. மஸ்ஜித்  2. பாடசாலை  3. வீடு  4. அலுவலகம்

4. கடுமையான நஜீஸிற்கு உதாரணம்,
   1. மது  2. நாயின் உமிழ்நீர்  3. இரத்தம்  4. வாந்தி

5. ‘நம்பிக்கை கொண்டோர்கள் தங்கள் தொழுகையை உள்ளச்சத்தோடு தொழுவார்கள்.’ இது,
   1. குர்ஆன் வசனமாகும்.  2. ஹதீஸாகும்.
   3. சட்ட வல்லுனர்களின் கருத்தாகும்.  4. மேலுள்ள அனைத்துமாகும்.

6. அல்லாஹ்விற்கு எந்தவொன்றையும் இணையாக்குவது,
   1. ஷிர்க்  2. குப்ர்  3. இல்ஹாத்  4. ரித்தத்

7. ஈமானிற்கும் குப்ரிற்கும் இடையிலான வேறுபாடு,
   1. ஸகாத்  2. தொழுகை  3. இபாதத்  4. நோன்பு

8. அத் - தஸ்கியா என்றால்,
   1. தைரியம்  2. ஒழுங்கு  3. உளத்தூய்மை  4. புரிந்துணர்வு

9. முஸ்லிமான ஆண்கள் தங்க ஆபரணங்கள் அணிவது,
   1. ஹலால்  2. ஹராம்
   3. முபாஹ்  4. மேலுள்ள எதுவுமில்லை.

10. நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ள மாதம்,
    1. ரஜப்  2. ரமழான்  3. துல்க.ஃதா  4. முஹர்ரம்



kalvi.lk

11. 'முஹாபழதுஸ் ஸலாத்' என்றால்,

1. தொழுகையை விடுதல்.
2. தொழுகையைப் பேணுதல்.
3. தொழுகையில் பராமுகமாக இருத்தல்.
4. தொழுகையை நிறைவேற்றுதல்.

12. 'ஜபீரத்' என்றால் என்ன?

1. சுத்தப்படுத்தக் கூடிய நீர்
2. காயத்திற்கு கட்டப்படும் கட்டு.
3. தூய்மைப்படுத்துதல்.
4. அசுத்தப்படுத்துதல்.

13. ஈமான் எத்தனை கிளைகளைக் கொண்டது?

1. 100 இற்கு மேற்பட்ட
2. 70 இற்கு மேற்பட்ட
3. 30 இற்கு மேற்பட்ட
4. 50 இற்கு மேற்பட்ட

14. அல்லாஹ்வால் இறக்கப்பட்ட வழிகாட்டல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

1. தூது
2. போதனைகள்
3. பொறுப்பு
4. பர்ள்

15. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை,

1. 50
2. 30
3. 10
4. 20

16. 'கிலாபத்' என்றால்,

1. இறை வழிகாட்டல்
2. அல்லாஹ்விற்கு வழிப்படல்.
3. உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக செயற்படல்.
4. இஸ்லாத்தைப் பாதுகாத்தல்.

17. இபாதத்தின் வகைகள்,

1. 4
2. 3
3. 2
4. 5

18. 'குல்லதைன்' அளவிலும் குறைந்த நீர் அழைக்கப்படுவது,

1. மாஉன் கலீல்
2. மாஉன் முதலக்
3. மாஉன் முதனஜ்ஜிஸ்
4. மாஉன் தாஹிர்

19. 'பர்ளு கிபாயா' என்றால்,

1. கட்டாயக் கடமையாகும்.
2. சுன்னத்தான கடமையாகும்.
3. கூட்டுக் கடமையாகும்.
4. லௌகீக செயற்பாடாகும்.

20. ''தொழுகையை பேணித் தொழுங்கள். நிச்சயமாக விசுவாசிகள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்.'' இது,

1. குர்ஆன் வசனம்
2. ஹதீஸ்
3. அறிஞர்களின் கூற்று.
4. மேலுள்ள அனைத்தும்



kalvi.lk

21. 'கப்பாரா' என்றால்,

1. அச்சமற்ற தன்மையாகும்.
2. சிறு பாவமாகும்.
3. அடிபணிதலாகும்.
4. குற்றப்பரிகாரம் ஆகும்

22. செல்வத்தோடு தொடர்புடைய இபாதத்,

1. ஸக்காத்
2. நோன்பு
3. ஹஜ்
4. தொழுகை

23. வணங்குதல், வழிபடுதல், கீழ்படிதல் எனும் கருத்தை தரும் சொல்,

1. கிலாபத்
2. இபாதத்
3. இமாரத்
4. ஹிதாயத்

24. மனிதனால் அதிகம் சிறைப்படுத்தப்பட வேண்டிய ஓர் உறுப்பு,

1. நாவு
2. கைகால்
3. இரு காதுகள்
4. இரு கண்கள்

25. நபி(ஸல்) அவர்களுக்கு வஹி இறங்கிய இடம்,

1. துர்சினாய் மலை
2. ஹிறா குகை
3. அரபா மைதானம்
4. தவ்ர் குகை

26. ''மு.ஃமினிற்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்.'' இது ஓர்,

1. குர்ஆன் வசனமாகும்.
2. ஹதீஸாகும்.
3. அறிஞர்களின் கூற்றாகும்.
4. அமலாகும்.

Education கல்வி அධ්‍යාපන

27. கஸ்ரு, ஜம்மு செய்ய முடியாத தொழுகை,

1. ளுஹர்
2. சுபஹ்
3. மஃரிப்
4. அஸர்

28. ''ஸமியல்லாஹு லிமன் ஹமிதா'' என்றால்,

1. எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே.
2. அல்லாஹ் தன்னை புகழ்பவனின் புகழை செவிமடுத்தான்.
3. வானம், பூமி நிரம்பிய புகழ் யாவும் உனக்கே உரியன.
4. என்னை நேர்வழியில் செலுத்துவாயாக : எனக்கு சுகமளிப்பாயாக!

29. இறுதி அத்தஹிய்யாத் இருப்பு அழைக்கப்படுவது,

1. இப்திராஷ் இருப்பு
2. தவர்ருக் இருப்பு
3. நடு இருப்பு
4. இஃதிதால் இருப்பு

30. ''எவர் ஒருவர் தனது தேவைக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யவில்லையோ, அவன் மீது அல்லாஹ் கோபப்படுகின்றான்.'' இது,

1. குர்ஆன் வசனம்
2. ஹதீஸ்
3. அறிஞர்களின் கூற்று
4. தலைவர்களின் கூற்று



kalvi.lk

31. ‘நப்ஸுல் முத்ம இன்னா’ என்றால்,

1. தான் நொந்துக் கொள்ளும் உள்ளம்
2. திருப்தியடைந்த உள்ளம்
3. பாதிப்புக்குள்ளான உள்ளம்
4. அமைதியான உள்ளம்

32. நற்பண்புகளைக் காட்டுவதற்கு பயன்படுத்தும் அரபுச் சொல்,

1. மகாரிமுல் அஹ்லாக்
2. ஹுலூகுல் இபாதா
3. ஸலாத்
4. இமாரத்

33. சிறுவயதிலிருந்தே நற்பண்புகளைக் கொண்ட நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்,

1. அஸ் ஸாதிக்
2. அமீர்
3. இமாம்
4. ஸூபி

34. ‘சப்தங்களில் மிகவும் கேவலமான சப்தம் கழுதையின் சப்தமே’ இவ்வசனம் இடம்பெறும் ஸூறா,

1. ஸூறதுல் குறைஷ்
2. ஸூறதுல் பகறா
3. ஸூறதுல் யாஸீன்
4. ஸூறதுல் லுக்மான்

35. இறுதியானதும், உறுதியானதுமான சான்றுகளைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையானது,

1. ஹதீஸ்
2. அகீதா
3. குர்ஆன்
4. இஜ்மா

36. ஜும்ஆ நேரத்தில் வியாபாரத்தில் ஈடுபடுவது,

1. ஹலால்
2. ஹராம்
3. பர்ளு ஐன்
4. பர்ளு கிபாயா

37. நபி (ஸல்) அவர்கள் மிஹ்ராஜ் சென்ற மாதம்,

1. முஹர்ரம்
2. துல் க.்.தா
3. ரஜப்
4. ரமழான்

38. குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டிய இபாதத்,

1. அன்பளிப்புச் செய்தல்.
2. அகீகா கொடுத்தல்
3. உழ்ஹிய்யா கொடுத்தல்.
4. ஸதகா கொடுத்தல்.

39. இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்களில் இரண்டாவது இடம் வகிப்பது,

1. குர்ஆன்
2. இஜ்மா
3. கியாஸ்
4. ஹதீஸ்

40. சொல்லோடு தொடர்புடைய ரித்தத்திற்கு உதாரணமாகக் கொள்ளக் கூடியது,

1. வட்டி
2. அல்-குர்ஆனைக் கிழித்தல்.
3. நபிமார்களைக் குறை கூறுதல்.
4. இறையச்சம் இல்லாமை.

(புள்ளிகள் 2x20=40)

***



kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: இஸ்லாம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 2 |

# பகுதி - II

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாவுக்கு 10 புள்ளிகளுமாக வழங்கப்படும்.

**(01)** சுருக்கமான விடை தருக.

1. மறுமை வாழ்வுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் உள்ளடங்குகின்ற நம்பிக்கை எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
2. இறுதியானதும் உறுதியானதுமான சான்றுகளைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அரபுச் சொல்லை எழுதுக.
3. 'இமாரத்' எனும் சொல்லின் கருத்தினை எழுதுக.
4. 'ரிஸாலத்' என்றால் என்ன?
5. இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்ட சுஹுபுகளின் எண்ணிக்கை யாது?
6. தொழுகையின் பர்ளுகள் **<u>நான்கினை</u>** எழுதுக.
7. அன்பு வைப்பதற்கு பொருத்தமான **<u>இரு</u>** பிரிவுகளையும் எழுதுக.
8. 'தஸ்கியா' என்றால் என்ன?
9. முதல் தக்பீர் கட்டியதைத் தொடர்ந்து ஓதப்படும் ஆரம்ப ஓதல் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
10. நஜீஸின் வகைகள் **<u>மூன்றினைப்</u>** பெயரிடுக.



kalvi.lk

(02) 1. அகீதாவிற்கு முரணான இரு பிரிவுகளை எழுதுக.

2. அகீதா அதன் இலகுத் தன்மையை இழந்தமைக்கான காரணங்கள் 2ஐத் தருக.

3. அகீதாவின் தூய்மைத் தன்மையைப் பேணுவதற்காக முயற்சிகள் மேற்கொண்ட அறிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(03) 1. ஸாலிஹான ஓர் அமல் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனை யாது?

2. ஈமானிற்கும் அமலிற்கும் இடையே உள்ள தொடர்பை எழுதுக.

3. ஒரு மு.்.மினிற்கும் மு.்.மினல்லாதவனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எழுதுக.

(04) 1. அல்குர்ஆனில் மனித உள்ளத்தின் எத்தனை நிலைகள் பற்றி குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன?

2. உளத்தூய்மை ஏற்படுவதற்காக நாம் செய்ய வேண்டிய 3 விடயங்களைக் குறிப்பிடுக.

3. தஸ்கியாவின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(05) 1. ஆரம்பத் தக்பீர் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

2. தொழுகை எச்சந்தர்ப்பத்தில் கடமையாக்கப்பட்டது?

3. தொழுவதன் மூலம் கிடைக்கும் பயன்களைக் குறிப்பிடுக.

(06) 1. நற்பண்புகளைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் அரபுச் சொற்கள் 2ஐ எழுதுக.

2. சூறதுல் லுக்மானில் குறிப்பிடப்பட்டுள்ள நற்பண்புகள் 3ஐக் குறிப்பிடுக.

3. சூறதுல் புர்கானில் குறிப்பிடப்பட்டுள்ள நற்பண்புகளுல் 5ஐக் குறிப்பிடுக.

(07) பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1. இபாதத் 2. கிலாபத் 3. தயம்மும் 4. ஜபீரத்

***



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page